பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 25 செவ்வாய்க்கிழமை (09-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 44

# மட்டக்களப்பில் மூவாயிரம் புலிகள்

# பெரும் தாக்குதல்களுக்காக குவிப்பு

## புலனாய்வுத்துறை அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜனவரி 9

மட்டக்களப்பில் இராணுவத் தலைமையகம், இராணுவ சோதனை நிலையங்கள், முகாம்கள், படை வாகனங்கள், பொலீஸ் நிலையங்கள் ஆகியவற்றின் மீது பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்காக சுமார் மூவாயிரம் பேரைக் கொண்ட விடுதலைப் புலிகளின் பெரும் அணி ஒன்று மட்டக்களப்புப் பிரதேசத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசின் புலனாய்வுத்துறை அரசுக்கு இவ்வாறு எச்சரிக்கை தெரிவித்திருக்கின்றது.

பொலீஸ் மற்றும் புலனாய்வு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருப்பதாக ''த சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் தெரிவித்தது.

மட்டக்களப்பைச் சூழ வாகரை, வவிணதீவு, கொக்கட்டிச்சோலை, கிரான், தொப்பிகலை பகுதிகளில் பதுங்கு குழிகளை அமைத்து புலிகள் தயாராக இருப்பதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திவெளியில் புதிதாக இராணுவ முகாம்

மட்டக்களப்பில் சந்திவெளிப்பகுதியில் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து தாக்குதல்களை நடத்தியதையடுத்து —

சந்திவெளியில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சந்திவெளியில் கிரிமுட்டி பண்ணைக்கு முன்பாக உள்ள தேக்குமரத் தோட்டத்திலேயே இந்த முகாம் அமைக்கப்பட்டது.

கிரானுக்கும், சந்திவெளிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 3 கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று இயங்க ஆரம்பித்தன

சாவகச்சேரி, ஜன, 9

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று கிளிநொச்சியில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளன.

வேலணை ப.நோ.கூ.சங்கம் ஆனந்தபுரம், கரடிப்போக்கு சந்தி, உருத்திரபுரம் 8 வாய்க்கால் ஆகிய இடங்களில் கிளைகளை திறந்துள்ளது.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ சங்கம் தலைமையகத்தை கனகபுரத்தில் திறந்துள்ளது. அதன் இருகிளைகள் ஸ்ரீநகரிலும் ஆனந்தபுரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ. சங்கக் கிளை முழங்காவிலில் நிறுவப்பட்டது.

மானிப்பாய், தெல்லிப்பளை சுன்னாகம் ப.நோ.கூ.சங்கங்கள் விரைவில் கிளிநொச்சியில் தமது பணியை ஆரம்பிக்கவிருக்கின்றன. (இ-3)

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குண்டுவெடிப்பைத் தாங்கும் சுவர்கள்

### அவசரமாக கட்டிமுடிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 9

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் குண்டு வெடிப்புக்களைத் தாங்கக்கூடிய சுவர்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தச் சுவர்கள் விமான நிலையத்தின் உள்வரவு, வெளிவரவுப் பகுதிகளிலும், வாகன பாதுகாப்புப் பகுதிகளிலும் அமைக்கப்படவிருக்கின்றன.

இவை ஆறு வாரங்களில் 55 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்.

குண்டு வெடிப்பினால் ஏற்படும் சிதறல்கள் மற்றும் அதிர்வுகள் விமான நிலைய பிரதான கட்டடத்தை அடையவிடாது இந்தச் சுவர்கள் தடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சுவர்கள் 450 மீற்றர் நீளம் கொண்டவையாக இருக்கும்.

குண்டுத் தாக்குதல் எதிர்ப்புச் சுவர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அமைக்கப்படுவது இதுவே முதல் தடவை ஆகும். (இ-3)

## வாழைச்சேனை முதல் ஏறாவூர் வரை நிலக்கண்ணி

### புலிகள் புதைத்துள்ளனராம்

கொழும்பு, ஜன. 9

பொலன்னறுவை — மட்டக்களப்பு வீதியில் வாழைச்சேனை முதல் ஏறாவூர் வரை உள்ள எட்டு மைல் பாதையில் பெருமளவு கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் புதைத்திருப்பதாக '' த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

## ஸ்ரீலங்கா அரசுடன்பேசி மக்களின் திரவப்பண பிரச்சினையை தீர்க்குக

### பூட்ரஸ் காலிக்கு வங்கி வாடிக்கையாளர் சங்கம் கடிதம்

சாவகச்சேரி, ஜன, 9

குடாநாட்டுக்கு திரவப் பணம் எடுத்து வருவதற்கு அரசு விதித்துள்ள கட்டுப்பாடு காரணமாக இன்னல் படும் மக்களுக்கு உதவும் வகையில் ஸ்ரீலங்கா அரசுடன் பேசி மக்கள் துயர்துடைக்க உதவவேண்டும்''.

யாழ். மாவட்ட வங்கி வாடிக்கையாளர் சங்கம் ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

வடக்கில் உள்ள வங்கிகளில் மக்கள் வைப்பிட்ட தொகை 670 கோடியே 50 லட்சம் ரூபாவாக இருந்த போதும், அந்த மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான திரவப்பணத்தை வழங்க முடியாத நிலையில் வங்கிகள் உள்ளன.

இது சர்வதேச வங்கியியற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விரும்பிய நேரம் புலிகள் ஊடுருவக் கூடிய நிலையில்

### அமல் ஜெயசிங்க கூறுகிறார்

லண்டன், ஜன. 9

மட்டக்களப்பின் பாதுகாப்பு திருப்திகரமானதாக இருப்பதாக படையினர் தெரிவித்த போதும் —

வெடிபொருள்களுடன் விடுதலைப் புலிகள் நகருக்குள் ஊடுருவி விரும்பியவாறு செயற்படக் கூடிய நிலையே இருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யோகேஸ்வரன் வீட்டில் கொள்ளை

கொழும்பு, ஜன. 9

முன்னாள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வி. யோகேஸ்வரனின் கொழும்பு வீட்டுக்குள் புகுந்த இரு தமிழ் இளைஞர்கள், அவரது மனைவியை அறை ஒன்றில் கட்டி வைத்து பூட்டிவிட்டு ஒரு லட்சம் ரூபா பணத்தையும், தங்க ஆபரணங்களையும்ம் கொள்ளையடித்துச் சென்றனர்.

திருமதி யோகேஸ்வரன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அனுருத்த நாடு திரும்பியவுடனே, 2 ஆம் கட்ட இராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஜன. 9

வடக்கு – கிழக்கில் பெரும் இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தைத் தொடர்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாராகிவிட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் —

வெளிநாட்டுக்குச் சென்றிருக்கும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நாடு திரும்பியதும் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் ''த சண்டே லீடர்'' ஆங்கில வார இதழின் பாதுகாப்புச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐந்து கப்பல்களில் நவீன யுத்த தளபாடங்கள் கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதாகவும் —

வடக்கு — கிழக்கில் விரைவில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கூறப்படுவதை இது உறுதிப் படுத்துகின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுமுறையில் சென்றுள்ள அனுருத்த ரத்வத்தை இந்தியா, பாகிஸ்தான், எகிப்து உட்பட எட்டு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையை ஐ.நாவில் கிளப்ப
# பிரிட்டிஷ் அரசிடம் வேண்டுகோள்

இலங்கை இனப்பிரச்சினையை ஐ.நா பாதுகாப்புச் சபையில் கிளப்புங்கள்.

இவ்வாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை கோருவதென லண்டனில் உள்ள தேசிய சமாதான அக்கடமி முடிவு செய்துள்ளது.

சர்வதேச மனிதஉரிமைகள் தினத்தன்று லண்டனில் கூட்டமொன்றை நடத்திய தேசிய சமாதான அக்கடமி மேற்கண்ட முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் வடபகுதியில் உண்மையான நிலையைக் கண்டறிவதற்காக சர்வதேச மற்றும் சுயாதீன அமைப்புகளின் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தடை ஏதுமின்றி செல்வதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டிய அவசியம் குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துமாறு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்தை கேட்டுக்கொள்வது என்றும்—

இது குறித்து அவரைச் சந்தித்துப் பேச தூ... ஒன்றை அனுப்புவது ...என்றும்—

அக்கூட்டத்தில் மேலும் முடிவுசெய்யப்பட்டது.

## அதிபர்கள் கலந்துரையாடல்

உடுவில் மான்ஸ், மாதகல் விக்கினேஸ்வரா, இணுவில் இந்துக்கல்லூரி, பெரியவிளான் றோ. க. த. பாடசாலை ஆகியவற்றின் அதிபர்களை நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவையுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளரால் கேட்கப்படுகிறது.

## குளத்தில் மூழ்கி மரணம்

குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் தாமரைக் கொடியில் சிக்கி நீரில் மூழ்கி மரணமானார்.

நுணாவிலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் ஆவரங்காலைச் சேர்ந்த சின்னத்தம்பிகருணாகரன் (வயது22) என்றஇளைஞனே உயிரிழந்தவராவார்.

இவர் யாழ்ப்பாணம் தொழிநுட்பக் கல்லூரி மாணவராவார்.

---


## உயிர்களைக் காப்போம்

### தொடர் காய்ச்சலுக்கு புதிய மருந்து

விடாக்காய்ச்சல் அல்லது தொடர் காய்ச்சல், பழைய சுரங்கள், முறைக்காய்ச்சல் (மலேரியா) என்பவைகளினால் கிருமி நச்சு (Septisaemia) ஏற்பட்டு பலர் மரணமடையக் காணப்படுகின்றது. எல்லாவித காய்ச்சலுக்கும், ஏற்கனவே பாவிக்கப்பட்டு, அதனால் நல்ல குணத்தை தந்த ''விஷ்ணு கரந்தை'', ''நிலவேம்பு'' சீந்தில் முதலிய மூலிகைகளில் இருந்து ''கோபாமினால்'' தயாரிக்கப்பட்ட ''கரந்தைப் பாணியை'' பாவியுங்கள்.

எமது கோபாம் மருந்து விற்பனை நிலையங்களில் தற்போது பெறமுடியும்.

தலைவர்,
சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்.

(சி/3045)



## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

க. பொ. த. உயர்தரப்பரீட்சை 1995

மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளை கீழ் கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்

செல்வி. சின்னப்பு
(முகாமையாளர்)
மே/பா திருமதி பரம் தணிகாசலம்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபைக்கு அண்மையில்)

(C/3034)


## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம்

மாவில், கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், இமையாணன் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம் (ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) 08.01.96 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சியாமளா ஸ்ரீதரன் (லண்டன்), உதயசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரனின் (லண்டன்) மாமனாரும், சுவீத்தாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.96) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் கரணவாய் வடக்கு, மாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவப்பிரகாசம்
(மைத்துனர்)

மாவில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(39938)

### மார்க்கண்டு செல்லத்துரை A.M.N.

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும், கோலாம்பூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான மார்க்கண்டு செல்லத்துரை A. M. N. 27 - 12 - 95 இல் கோலாம்பூரில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற செல்லமுத்து, சரஸ்வதி ஆகியோரின் அன்புக் கணவரும், சகாதேவன் (Barrister, Kuching), ராஜா (Canda), ரதிதேவி, Dr. ஹரிராஜா, Dr. ஜெயராஜா, அனுஷியா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 - 12 - 1995 இல் கோலாம்பூரில் நடந்தேறின. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லையா இராசேந்திரம்
(பெறாமகன்)

''இராஜஸ்தான்'',
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(39927)

### திருமதி டானியேல் கண்மணி

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 41/1 கோவில் வீதியில் வசித்தவருமான திருமதி டானியேல் கண்மணி அவர்கள் 08 - 01 - 96 இல் மிருசுவிலில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற டானியேலின் அன்பு மனைவியும், பிரான்சிஸ் வில்லியம் [ஆஸ்திரேலியா], இராஜமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தலீலா [ஆஸ்திரேலியா], எட்வின் யோசவ் [கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றாஜ், கொலின், மொறின், தோமஸ் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [09 - 01 - 96] காலை 9.30 மணிக்கு அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும். இரங்கல் திருப்பலியின் பின் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. எட்வின் யோசவ்
[மருமகன்]

மே/பா ஆ. பிறேமன்,
வடக்கு வீதி, மிருசுவில்.

[39939]


## தங்க ஆபரணம் யாருடையது?

பருத்தித்துறை இறங்குதுறைக்குச் சமீபமாக தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொலைத்தவர்கள் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து பெற்றுக் கொள்ளவும்.

அருட்திரு
எஸ். எஸ்.
கருணைராஜ்,
மெதடிஸ்த பெண்கள்
கல்லூரி,
பருத்தித்துறை.

(39836)



## யாழ். பல்கலைக் கழகம்

### இலிகிதர்/ நூலக உதவியாளர்/ காசாளர்/ களஞ்சியப் பொறுப்பாளர்/ தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தரம் 1/ விசேட தரம் பதவி உயர்வு

மேற்படி பதவி உயர்வுக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களிடமிருந்து 1990/ 91/ 92/ 93/ 94ஆம் ஆண்டுகளுக்குக் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை 1996- 01- 13 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள பல்கலைக்கழக உப அலுவலகத்தில் அல்லது கிளிநொச்சி விவசாயபீடத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அதிபர்?

(C/3033)



## யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்

## சுவரொட்டிப் போட்டி

குடும்ப, சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள சர்வதேச றோட்டறிக் கழகத்தினர், இத்தகைய தனது பணியினைக் கொண்டாடுமுகமாக விழாவொன்றிற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இதற்கமைய யாழ். றோட்டறிக் கழகத்தினர், ஆரம்பப் பாடசாலை வயதையுடைய சிறார்களுக்கு ''இந்த உலகத்தை எவ்வாறு ஓரளவு சிறப்பான வாழ்விடமாக அமைத்துக் கொள்ளலாம்'' என்ற மையக்கருத்தை உள்ளடக்கியதான சுவரொட்டிப் போட்டி ஒன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளார்கள். இதில் வெற்றிபெறும் சுவரொட்டி கனடாவில் கல்காறி என்ற நகரில் 1996 ஆம் ஆண்டு யூன் மாதம் நடைபெறும் சர்வதேச றோட்டறியின் வருடாந்த மாநாட்டில் காட்சிக்கு வைக்கப்படும்.

### சுவரொட்டிப் போட்டிக்கான விதிமுறைகள்

சுவரொட்டிக்கான மையக் கருத்து:

**இந்த உலகத்தை எவ்வாறு ஓரளவு சிறப்பான வாழ்விடமாக அமைத்துக் கொள்ளலாம்**

போட்டியாளர்கள்:

யாழ். மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆரம்ப பாடசாலை வயதுடைய சிறார்கள் (ஆண்டு ஐந்து வகுப்புக்கு உட்பட்டவர்கள்)

சுவரொட்டி:

★ சுவரொட்டியைத் தயாரிப்பதற்கு பாவிக்கப்படக்கூடிய பொருள்கள்:- கிரேயன்ஸ் (Crayons), வர்ணப் பூச்சுகள் (Paints), பென்சில்கள், பேனாக்கள், மாக்கேர்ஸ் (Markers). பாவிக்கப்படும் அட்டைகள் யாவும் சுலபமாகச் சுருள் ஆக்கி அஞ்சல் செய்யக் கூடியவையாக அமைதல் வேண்டும். (சுவரொட்டிகள் முன்னர் எப்போதும் வெளிவராததும், சுய ஆக்க சித்திர வடிவமைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். நிழற்படங்களோ, அன்றேல் வீடியோ பிரதிகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

★ சுவரொட்டியின் அளவு 36'' X 24'' (150 Cm. X 100 Cm.) க்கு அதிகரித்ததாக இருக்கக் கூடாது.

★ சுவரொட்டிகள் யாவும் சர்வதேச றோட்டறியின் உருத்துடைமையாக அமையும். திருப்பி அனுப்பப்படமாட்டா.

சுவரொட்டிகள் பின்வரும் தகைமைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்

★ சமர்ப்பிக்கும் தன்மை (Presentation)

★ ஆக்கமும், கற்பனை வளமும் (Creativity & Imagination)

★ குடும்பத்தினதும், சமூகத்தினதும் தன்மைகளின் வெளிப்பாடு (Expression of Family & Community Values)

விண்ணப்பிக்கும் முறை:

★ போட்டியாளர்கள் தங்களது பெயர், முகவரியை சுவரொட்டியின் பின்புறத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

★ சுவரொட்டி, போட்டியாளரினால் சுய ஆக்கச் சித்திர வடிவமைக்கப்பட்டதென்பதை அத்தாட்சிப் படுத்தும் வகையில், அவர் வதியுமிடக் கிராமசேவையாளரினாலோ, பாடசாலை அதிபரினாலோ, கோவில் பிரதம குருவினாலோ அன்றேல் இன்ரறக்ட்/றோட்டறக்ட் போன்ற இளைஞர் குழுத் தலைவரினாலோ உறுதிப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு 1996 ஆம் ஆண்டு ஜனவரி 30ந் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

அதிபர்,
குகன் நிழற்பட மாடம்,
துறைமுக வீதி, பருத்தித்துறை.

அதிபர்,
சிவகணேசன் பட்டுச் சோலை,
3, சிறப்பு அங்காடி (மேல்மாடி),
சாவகச்சேரி.

இளைஞர் சேவை இயக்குநர்

(39835)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சிக்கியோர் அங்கிருந்து வெளியேறுவதற்கே விரும்புகின்றனர்!

## உணவு, மருத்துவ வசதி இல்லை என்கிறது 'ராவய'

கொழும்பு ஜன. 9

இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள யாழ் நகரில் நிலைமை இன்னும் சீராக வில்லை. அங்கு ஆயிரத்து 500 மக்கள் தான் வாழ்கின்றனர். அவர்களில் சிலர் அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். சிலர் வெள்ளைக் கொடிகளை தமது வீடுகளில் பறக்க விட்டு, அங்கேயே தங்கி உள்ளனர். அவர்களுக்கு மிகக் குறைந்த வசதிகளே வழங்கப்படுகின்றன. இதனால் அவர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறவே விரும்புகின்றனர்.

'ராவய' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

'ராவய' பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுகிறது வீடுகளில் இருப்போருக்கு உலர் உணவு வழங்கப்படுகிறது. அரிசியும் பருப்பும் மாத்திரமே உலர் உணவாக வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. நோய் வாய்ப்பட்டோரைப் பார்ப்பதற்கு வைத்தியர்கள் இல்லை. மருத்துவமனைகளும் இயங்கவில்லை. இது ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது அங்கு பொருளாதார நடவடிக்கைகள் முற்றிலும் ஸ்தம்பித்துள்ளன.

இந்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் மாத்திரமே அவர்கள் வாழவேண்டியுள்ளது.

அவர்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை நீக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் இம்மக்களும் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர அதிக வாய்ப்புண்டு என இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தகவல்களின்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குறித்து இராணுவத்தினர் திருப்தியடைகின்றனர்.

### நிமால் குறித்து அதிருப்தி

ஆனால் யாழ். புனரமைப்புக்குப் பொறுப்பான வீடமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறித்து அவர்கள் திருப்தியடையவில்லை.

அமைச்சர் சிறிபால டி சில்வா அங்குள்ள நிலைமையைச் சீர்செய்வதிலும் பார்க்க தனது பிரசாரங்களுக்கே முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிகிறது.

வீதி அபிவிருத்திசபையைச் சேர்ந்த 15 ஊழியர்களும் அடையாள அட்டை வழங்க 10 ஊழியர்களும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். இந்த ஊழியர்களுக்குக் கூட உணவு ஒழுங்காகக் கிடைப்பதில்லை எனப் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 600 பொலீஸார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் நாளாந்தத் தேவைகள் பாதிக்கப்படாவிடினும், யாழ்ப்பாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்ற உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்த எடுக்கப்படும் முயற்சிகளை விட தற்போது அங்குள்ள மக்கள் வெளியேறாமல் அவர்களைத் தங்கவைக்கும் முயற்சி கடினமானதாக அமையும்.

இப்படி ''ராவய'' மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

## செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அழைக்கப்படுவோர் விவரம்

சாவகச்சேரி, ஜன. 9

வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் இங்குள்ளவர்களுக்கு அனுப்பிய செய்திகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுக்கு கிடைத்துள்ளன.

இந்த செய்திகளைப் பெறுவதற்கு பருத்தித்துறையில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துடன் அல்லது கிளிநொச்சியில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் தேடுதல் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து தகவல் கிடைத்துள்ளோர் விவரம் வருமாறு:-

- திருமதி C. சண்முகநாதன் 52/ஏ, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
- ஜே. பிரான்சிஸ்கா, 139, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- எஸ்பிரியல் எமிலியஸ் 13, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- முடியப்பு குயின்டன், 85, புதிய பீச் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- அட்டிறன் பொனிபஸ், உபதபால் நிலையம், பளை.
- யேசுதாசன் யூட், 14, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.
- கமிலஸ் ஹெலனா, 38, புதுமை மாதா மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- அருட்சகோதரி பொனவஞ்சர், அதிபர், கொன்வென்ட், இளவாலை.
- மில்பிறெட் இந்திரா, 13, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- சாரதா மகாதேவன், ஆத்தியடி, பருத்தித்துறை.
- யோசுவா பிலிப், சியோன் தேவாலயம், மீசாலை.
- புஷ்பராஜா ராஜேஸ்வரி, இராசேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- அருட்சகோதரி பத்திமா, திருக்குடும்ப கன்னியர்மடம், மிருசுவில்.
- எஸ். செல்வமலர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, சாவகச்சேரி.
- என். விக்ரர் ஜெயகுமார், மே/பா கே. கிருஷ்ணன், ஆயுர்வேத வைத்தியர், மீசாலை வடக்கு.
- தம்பிப்பிள்ளை கணேசராசா, பாடசாலை ஒழுங்கை, நாவற்குழி.
- M. ஆனந்தராஜா மே/பா ஞானசந்திரன், பொலீஸ் நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.
- எஸ். கந்தசாமி, ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அரசடிச் சந்தி, கரவெட்டி வடக்கு.
- காசிப்பிள்ளை லோகேஸ்வரன், புகையிரத தண்டவாள வீதி, மிருசுவில்.
- அந்தோனிப்பிள்ளை லயனல் டக்ளஸ், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.
- அன்ரன் றொசிதா, கடற்கரையடி, தாளையடி.
- பரமேஸ்வரி செல்வரத்தினம், மே/பா திருமதி ரி. செங்காதரன், தச்சன்தரை, அல்வாய் கிழக்கு.
- தளையசிங்கம் குகதாசன், அமெரிக்கன் மிஷன் பண்ணை, வரணி.
- டேவிட் ஞானப்பிரகாசம் யோசெப், புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு.
- சிவகௌரி பாலசுப்பிரமணியம், D. O., விநாயகபுரம், முழங்காவில்.
- காசிப்பிள்ளை லோகேஸ்வரன், ஆலயகடவை, மிருசுவில்.
- திருமதி அக்னஸ் ஞானப்பிரகாசம், கடற்கரை வீதி, தாளையடி.
- மாட்டின் பாஸ்கரன், புனித பிலோமினா தேவாலயம், முகமாலை, மிருசுவில்.
- அருளம்மா சலசு, ரயர் தொழிற்சாலை கைதடி.
- வீரவாகு வீரராகவன் மே/பா, சரா தாமோதரம்பிள்ளை, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
- நல்லையா புஷ்பராசா, 4, இராசேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
- அன்ஸ்லி றொஷான், மே/பா, பங்குத் தந்தை, றோ. க. தேவாலையம், தாளையடி.
- பொன்னையா சிவபாதசுந்தரம் மே/பா, பீதாம்பரம், திகிரி ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
- மகாலிங்கம் கைலை, எஸ். தங்கராசா, மே/பா. நவரத்தினம், நவபுரம், கைதடி.
- சிவராஜா ராணி மே/பா, வி. சின்னக்குட்டி, குயவன் மடத்தடி, சாவகச்சேரி வடக்கு.
- அருட்சகோதரி சோபியா, திருக்குடும்ப கன்னியர் மடம், மிருசுவில்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை: மற்றும் சில பாடசாலை முடிவுகள்

சாவகச்சேரி, ஜன. 9

கடந்த சனிக்கிழமை வெளியான ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகளில் முன்கொண்டு கிடைத்த பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகள் ஞாயிறு உதயனில் வெளியாகியிருந்தன.

அதன் பின்னர் கிடைத்த மற்றும் சில பாடசாலைகளின் சிறந்த பொறுபேறுகள் விவரம் வருமாறு:-

கொக்குவில் இந்து

★ கணிதம் — 4ஏ(கைலாசபிள்ளை நகுலேஸ்வரன்)
★ மருத்துவம் — ஏ பி 2ஸி
★ கலை — 2ஏ 2பி.
★ வர்த்தகம் — 3ஏ பி (இருவர்), [237 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்).

கனகரத்தினம் ம. வி.

★ வர்த்தகம் — 3ஏ ஸி [மூவர்), 2ஏ 2பி [ஒருவர்], ஏ 3பி [அறுவர்].
★ கலை — 2ஏ 2பி [ஒருவர்], 2ஏ 2ஸி [ஒருவர்].

யாழ்ப்பாணக் கல்லூரி

★ கணிதம் — ஏ 2பி ஸி [ஒருவர்], ஏ பி ஸி எஸ் [ஒருவர்].
★ மருத்துவம் —4ஏ[ரஜனி மகேந்திரன்], 2ஏ 2பி [ஒருவர்].
★ வர்த்தகம் — ஏ 3 ஸி [ஒருவர்].
★ கலை — 2ஏ பி ஸி [ஒருவர்], ஏ பி 2ஸி [ஒருவர்].

சென். பற்றிக்ஸ்

★ கணிதம் — 2ஏ 2பி [இருவர்], 2ஏ பி ஸி [ஒருவர்].
★ உயிரியல் — 4ஏ [குணசேகரம் ஜூட் ரிரோன்).
★ வர்த்தகம் — 2ஏ 2பி [ஒருவர்], 2ஏ பி ஸி [ஒருவர்].
★ கலை — ஏ பி 2ஸி [ஒருவர்], 2பி 2ஸி [இருவர்).

உடுவில் மகளிர்

★ உயிரியல் — 3ஏ பி [ஒருவர்], 2ஏ பி ஸி [ஒருவர்].
★ கலை — 2ஏ பி ஸி [ஒருவர்], ஏ 3பி [ஒருவர்].
★ வர்த்தகம் — ஏ 2பி ஸி [ஒருவர்].

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 40 கோடி ரூபா நஷ்டமாம்

கொழும்பு, ஜன. 9

கல்முனையில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தை கடந்த புதனன்று விடுதலைப்புலிகள் தகர்த்தமையால் அரசுக்கு 40 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக பி.பி.சி. யின் சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

## பளைப்பகுதியில் நோய்களால் பலர் பாதிப்பு

தென்மராட்சி, ஜன. 9

பளைப் பிரதேசத்தில் வயிற்றோட்டம், மலேரியாக் காய்ச்சல். மற்றும் நுளம்புக் கடியினால் ஏற்படும் புண்கள் ஆகியவற்றால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் சபை மருத்துவக் குழுவின் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சபையினால் பளைப் பிரதேசத்தில் உள்ள நலனோம்பு நிலையங்களில் நடத்திய ஆய்வின் போது பளை, இத்தாவில், முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகளில் இந்த நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டதாக திருச்சிலுவை கன்னியர் சபை [illegible] தெரிவித்தார். (இ-7)

## 4 பாடங்களிலும் 'ஏ' எடுத்த மற்றும் 3 மாணவர்கள்

சாவகச்சேரி, ஜன. 9

கடந்த சனிக்கிழமை வெளியான ஜி. சீ. ஈ உயர்தர பரீட்சை முடிவுகளில் நான்கு பாடங்களிலும் 4 ''ஏ'' பெற்ற மேலும் 3 மாணவர்களின் விவரங்கள் கிடைத்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் 18 மாணவர்கள் 4 ''ஏ'' பெற்றிருந்திருந்தார்கள். இவர்களில் 15 பேரின் விவரங்கள் 7ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தன.

ஏனைய மாணவர்களின் விவரம் வருமாறு

கொக்குவில் இந்து

★ கணிதம் — கைலாசபிள்ளை நகுலேஸ்வரள்.

யாழ்ப்பாணக்கல்லூரி

உயிரியல் — ரஜனி மகேந்திரன்.

சென் பற்றிக்ஸ்

உயிரியல் — குணசேகரம் ஜூட் ரிரோன். (இ-3)


# உதயன்
## இளை நிலையம்
## பருத்தித்துறை

வடமராட்சி வாழ் மக்களே!

உங்கள் வசதி கருதி பருத்தித்துறையில் உதயன் கிளை நிலையம் இப்போது இயங்குகிறது.

★ விளம்பரம் ★ விநியோகம்

இவை சம்பந்தப்பட்ட உங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற கிளை நிலையத்தை நாடுங்கள்.

காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை திறந்திருக்கும்.

## உதயன் கிளை நிலையம்

பழைய பஸ் சதுக்கம், பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவ/ இந்துக் கல்லூரியிலிருந்து 300 யார் தூரத்தில் சகல வசதிகளுடன் வீடு வளவு விற்பனைக்குண்டு தொடர்பு க. கனகசபாபதி, செல்வம் கூல்பார், சாவகச்சேரி. (39824)

### காணி விற்பனை

மீசாலையில் வீடு வளவு விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம் மாலை 4.00 மணிக்கு மேல். K· நித்தியானந்தன், மே/பா. தம்பு மயில்வாகனம், சென்றல் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (39815)

### தளபாடங்கள் தேவை

பாவித்த அலுவலக மேசைகள், கதிரைகள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் அவற்றின் அளவு மற்றும் விலை விவரங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். நிர்வாக உத்தியோகத்தர், உதயன் பணிமனை, பருத்தித்துறை வீதி, (கனகம் புளியடிச்சந்தி அருகில்) சரசாலை.

### வீடு தேவை

ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தாருக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. நல்ல முற்பணமும் வாடகையும் வழங்கப்படும். தொடர்பு: றொலெக்ஸ் ஹோட்டல், கச்சாய் வீதி, சாவகச்சேரி. (39908)

### தராசு தேவை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு எவரி மேடைத் தராசு 250 கிலோ எடை நிறுக்கக்கூடியது படிகளுடன் தேவை. தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், புத்தூர் வீதி, மீசாலை வடக்கு, மீசாலை. (39830)

## முத்திரை வான்கடித உறை தட்டுப்பாடு

மட்டுவில் வடக்கு, ஜன 9

சாவகச்சேரி தபால் அலுவலகத்தில் முத்திரைகள், வான் கடித உறைகள் ஆகியனவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதேவேளை, தனியார் கடைகளிலும் முத்திரைகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் முத்திரை விற்கப்பட்ட ஒருசில கடைகளிலும் விலை உயர்வாக இருந்தது.

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு சமீபமாகவுள்ள கடை ஒன்றில் 20 ரூபா முத்திரை 25 ரூபாவாக விற்கப்பட்டது. (இ-135)

## விளையாட்டு வினையானது!

மந்திகை ஜன. 9

விளையாட்டுத்தனமாக சிறுவன் ஒருவன் எறிந்த கத்தரிக்கோல் சகோதரி மீது குத்தியதால் சகோதரி படுகாயமடைந்தார்,

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் துர்க்காவதி (வயது 13) என்ற சிறுமியே படுகாயமடைந்தார்.

கத்தரிக்கோலின் நுனிப் பகுதி முறிந்து உட்சென்றுள்ளதால் படுகாயமடைந்தவர் சுவாசிக்க சிரமமான நிலையில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

# இல்லாத சட்டம் ஒன்றின் கீழேயே இரு மாகாண சபைகளும் கலைப்பு!

கொழும்பு, ஜன. 9

இல்லாத சட்டம் ஒன்றின் கீழ் வடமத்திய மாகாண சபையும் சப்பிரகமுவ மாகாணசபையும் கலைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அரசமைப்புச் சட்டத்தின் 154 (பி) பிரிவு மற்றும் 154 (எவ்) பிரிவு ஆகியவற்றின் கீழ் மேற்படி இரு சபைகளும் கலைக்கப்படுவதாக கடந்த மூன்றாம் திகதி மேற்படி மாகாண சபைகளின் ஆளுநர்களான மைத்திரிபால சேனநாயக்கா மற்றும் சாளியா மத்தியூ ஆகியோர் வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தனர்.

ஆனால்—

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிய குடியரசின் அரசமைப்பில் 154 (பி), 154 (எவ்) என்ற பிரிவுகள் ஏதும் இல்லை என்று தற்போது சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

அரச அமைப்பில் 154 ஆவது பிரிவு உள்ளது. அது ''கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளும் செயற்பாடுகளும்'' குறித்து பிரஸ்தாபிக்கின்றது.

154 (4) (பி) என்ற பிரிவு அரசமைப்பில் இருக்கின்றது. அது ''கணக்காளர் நாயகம் தமக்கு தேவைப்படுமிடத்து கணக்காய்வுக்கு வெளியாரிடமிருந்து தொழில்நுட்ப, நிபுணத்துவ, விஞ்ஞான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்பது குறித்து பிரஸ்தாபிக்கின்றது.

அரசமைப்பிற்கு கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்பில் 154 (ஏ) 154 எவ் என்ற பிரிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை ''ஒரு மாகாணசபை தொடர்பில் ஆளுநரின் அதிகாரங்கள்'' குறித்து பிரஸ்தாபிக்கின்றன.

ஆனால் மேற்படி இரு சபைகளும் அரசமைப்பில் இல்லாத 154 (பி), 154 (எவ்) ஆகிய இரு பிரிவுகளுக்கும் கீழ் கலைக்கப்பட்டுள்ளன

சபைகளைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலின் சட்ட செல்லுபடி தன்மை குறித்தோ—

அத்தகைய வர்த்தமானி அறிவித்தலைத் தயாரிப்பது குறித்தோ—

தமது திணைக்களத்துடன் ஆலோசனை ஏதும் நடத்தப்படவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது. சட்ட வரைஞர் திணைக்களத்துடனும் ஆலோசனை செய்யப்படவில்லை.

ஆனால் மேற்படி வர்த்தமானி அறிவித்தலை ஏற்று அடுத்தகட்ட நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ளார்.

மேற்படி மாகாணசபைகளுக்கான புதிய தேர்தல்களுக்கு நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கான வர்த்தமகனி அறிவித்தல் தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸநாயக்காவினால் வெளியிடப்பட்டுள்ளது. (உ)

## யாழ். மிட் - ரவுண் றோற்றறக் கழகம் யாழ்ப்பாணம்

## விசேட பொதுக்கூட்டம்

கழக அங்கத்தவர்கள் அனைவரையும் எதிர்வரும் 11-01-96 வியாழக்கிழமை பி. ப 3.00 மணியளவில்சாவகச்சேரி நீதி மன்றத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: கழகத்தின் முக்கியவிடயம் சம்பந்தமாக ஆராய விருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— தலைவர்

(39929)

## வெளிவாரி மாணவரின் கவனத்திற்கு

பேராதனை பல்கலைக்கழகத்தில் (வெளிவாரி) G.A.Q பரீட்சைக்கு பதிவு செய்த மாணவர்கள் பரீட்சை விண்ணப்பம் செய்து கொள்வதற்காக சகல ஆவணங்களுடனும் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.(புதன் 10-1-96 ஆம்திகதி 9-12 மணி)

தொடர்பு:
S. அருள்நங்கை
C/o இராசேந்திரன்,
[அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக),
[39924] வினாசித்தம்பி ஒழுங்கை, சாவகச்சேரி.

## செஞ்சிலுவை......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)


- சௌந்தரராஜன் செல்வமலர் மே/பா. ஈஸ்வரன், சனசமூக நிலைய அருகில், ஊரெழு வடக்கு.
- முருகன் திருச்செல்வம் மே/பா. கதிரன் ஐயாத்துரை, இந்துக்கல்லூரி அருகில், உரும்பிராய்.
- அம்பலைபாகன் பராசக்தி, மே/பா. நவரத்தினம் கந்தசாமி, ''நியூலங்காலைட்'' கோப்பாய் சந்தி
- இளையதம்பி சரஸ்வதி, மே/பா. வீரகத்தி, வைரவர் கோவில் அருகில், நுணாவில்.
- செல்லையா சிவசிதம்பரம், மே/பா. பொன்னுத்துரை, ''அன்னை இல்லம்'' மானிப்பாய் வீதி, உரும்பிராய்.
- செல்லையா சுந்தரம், இ. போ. ச. சாரதி, உடுவில் தெற்கு, மானிப்பாய்.
- கந்தையா அழகேந்திரன், மே/பா. எஸ். ஜெயராஜா (சாமியார்), புகையிரத நிலையம் அருகில், சாவகச்சேரி.
- முத்துத்தம்பி பத்மநாதன், மே/பா. வி. ஜெகநாதன், ''குமர கோட்டம்'' கோண்டாவில் மேற்கு.
- தர்மலிங்கம் சுரேஷ்குமார், மே/பா. சரவணமுத்து, ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
- ஐயாத்துரை கந்தலிங்கம், பிள்ளையார் கோவிலடி, இணுவில் கிழக்கு.
- புத்திசிகாமணி சிதம்பரநாதன், மே/பா. பேரம்பலம், வினாயகர் பேக்கரி, இருபாலை.
- இரத்தினம் கலாராணி, மே/பா. ஆர். துரைராஜா, பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.
- மாதன் சிறிதரன், மே/பா. வி. பிரேமதாசன், ''ராணி பவனம்' இடைக்குறிச்சி, வரணி.
- சுப்பன் செல்வரத்தினம் மே/பா. இரத்தினம், திலீபன் வீதி, ஊரெழு வடக்கு.

(நாளை தொடரும்)

## கேக் ஐசிங் வகுப்புகள்

புதன்கிழமை (10-01-96) மாலை 2.00 மணிக்கு JEYA ICING வகுப்புகள் ஆரம்பமாகும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
திருமதி. ஆர். எஸ். தேவராஜா
ஜெயா ஐசிங் சென்ரர்,
இல. 7 கற்குழி ஒழுங்கை,
சாவகச்சேரி. (39931)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 10 — 01 — 1929

விண்ணில்: 09 — 01 — 1993

திருமதி

### முருகுப்பிள்ளை அன்னம்மா

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி, பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து, பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் மூன்று ஆகினும் எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திபெற எங்கள் நெஞ்சாரப் பிரார்த்திக்கிறோம்.

மகன்: M.S.
தையிட்டி,
காங்கேசன்துறை.

தற்போதைய முகவரி;
சங்கத்தானை,
சாவகச்சேரி. (39825)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 04 — 1958

உதிர்வு: 30 — 12 — 1985

### நடேசலிங்கம் அருந்தவம்

பத்தாண்டு சென்றாலும் உங்கள் புன்சிரிப்பும், நிலா ஒளி போன்ற முகமும் என்றென்றும் எங்கள் கண்களை விட்டு நீங்காது.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளை,
பெற்றோர், சகோதரர்கள்.

கண்டி வீதி,
கொடிகாமம். (39933)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வீடு கொளுத்தும் இராசாவுக்கு....

வங்காள விரிகுடாவில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் — என்று ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தாய்லாந்துக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்

வங்காள விரிகுடாவில் வெளிநாட்டுக் கப்பல்களின் ஊடுருவல்கள் இருப்பதாலேயே தாம் இது விடயத்தை தாய்லாந்து அதிகாரிகளுடன ஆராய்ந்ததாக அமைச்சர் கூறுகிறார்.

தாய்லாந்தின் மீன்பிடி இழுவைப் படகுகள் ஸ்ரீலங்கா கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து இந்த நாட்டின் கடல் வளத்தைச் சுரண்டுவதாக நீண்ட காலமாகக் குறை கூறப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் இணக்க நிலை எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

தாய்லாந்து ஒரு பௌத்த நாடு. ஸ்ரீலங்கா நீண்ட காலமாக அந்த நாட்டிடமிருந்து அரிசி இறக்குமதி செய்து வருகிறது

இந்த விடயங்களை எல்லாம் புறச்கணித்துவிட்டு, கதிர்காமரின் கண் திடீரென வங்காள விரிகுடா மீதும் அங்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்கள் மீதும் விழுந்தது ஏன்? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவைப்படும் ஆயுதங்களை தாய்லாந்தின் ஊடாகவே கப்பல்கள் மூலம் கொண்டு வந்து சேர்க்கிறார்கள் என்ற ஊகங்கள், தகவல்கள் இப்போது அடிக்கடி அடிபடுகின்றன.

இத்தகைய ஒரு பின்னணியில்தான், அது பற்றிய தகவல்கள் ஊர்ஜிதமாகும் பட்சத்தில் அதனைத் தடுக்கும் முயற்சியில் கதிர்காமர் இறங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அலுவல்களைக் கவனிப்பதே இப்போது இந்த அமைச்சருக்கு முழுநேர வேலையும், பொறுப்புமாக்கப்பட்டிருக்கிறது!

அதாவது —

விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் இயங்குவதையும், தமது செயற்பாடுகள் மூலம் அரசாங்கத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்துவதையும் என்ன பாடுபட்டும் தடுத்துவிட வேண்டும் என்பதில் சந்திரிகா கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் இயங்குவதை அந்த நாடுகளைக் கொண்டு தடுத்து விடுவதன் மூலம் அவர்களின் செயற்பாடுகளை நிறுத்தச் செய்வதன் மூலம்—

அவர்களைப் பெருமளவில் பலவீனப்படுத்தி விடலாம் என்று கணக்குப்போட்டே சந்திரிகா தன்னால் இயன்ற சகல வழிகளையும் கையாண்டு வருகிறார்.

தமது முயற்சிகள் பல இது வரை தோல்வி அடைந்த போதிலும் சளைக்காமல் புதிய புதிய வழிகளைச் சிந்திக்கிறார்; திட்டமிடுகிறார்.

அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் எடுபிடியாக அமைச்சர் கதிர்காமரைப் பயன்படுத்துகிறார்!

தமிழர் விவகாரத்தில் வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரியாகவே கதிர்காமர் விளங்குகிறார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## தொண்டாவின் போராட்டம் ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

கொழும்பும், ஜன. 9

எதிர்வரும் பொங்கலுக்கு அடுத்த நாள் மலையக தோட்டப் பகுதியில் ஆரம்பிக்கவிருந்த சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தை இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமான் ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இ.தொ.கா. இணைந்தபோது மலையக மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு 8 அம்சக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவற்றை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி சந்திரிகா அளித்த வாக்குறுதியின் பின்பே இ.தொ.கா. அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டது.

ஆனால் இந்த 8 அம்சகோரிக்கையில் ஒன்றையாவது நிறைவேற்ற உருப்படியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தொண்டமான் குற்றம் சாட்டி உள்ளார்.

(இ)

## கிழக்கில் 5 மாணவர்கள் 'ஏ' சித்தி

மட்டக்களப்பு, ஜன. 9

கடந்த வாரம் வெளியான ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் கிழக்கில் 5 மாணவர்கள் 4 பாடங்களிலும் ''ஏ'' சித்தி பெற்றுள்ளனர்.

திருகோணமலை கோணேஸ்வரா கல்லூரி, மட்டக்களப்பு சென்ற் மைக்கல் கல்லூரி, குருமண்வெளி சிவசத்தி கல்லூரி, கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 5 மாணவர்களே 4 ''ஏ'' பெற்றனர்.

(இ-3)

## இடம்பெயர்ந்த ஆசிரியர் 99 பேர் முல்லையில் கடமை

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த 99 ஆசிரியர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

இவர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையில் வகுப்பு 3 தரம் 2 இன் ஆரம்பச் சம்பளத்துக்குச் சமமான மாதாந்தப்படி வழங்கப்படும் என்றும் — கிழக்கு மாகாண கல்விச்செயலாளர் யாழ். வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு இ. சிவானந்தனுக்கு அறிவித்துள்ளார்.

(இ-3)

## ஜி. சி. ஈ. உயர்தர...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*தியாகராசா ம. வி.*

★ வர்த்தகம் — 2ஏ பி ஸி [ஒருவர்], 2பி 2ஸி [ஒருவர்].

★ கலை — பி ஸி 2 எஸ் [ஒருவர்], [பரீட்சையில் தோற்றிய 19 பேரில் 17 பேர் சித்தியடைந்தனர்].

*கோப்பாய் கிருஸ்தவ கல்லூரி*

★ கணிதம் — 3ஏ பி [ஒருவர்], 2ஏ 2பி (ஒருவர்].

★ வர்த்தகம் — 2ஏ 2பி [ஒருவர்], ஏ 3பி [ஒருவர்].

★ கலை — ஏ 2பி ஸி [ஒருவர்], ஏ பி 2ஸி [ஒருவர்].

*வட்டு இந்து*

★ உயிரியல் — ஏ3 ஸி (ஒருவர்), பி3 ஸி (ஒருவர்)

★ கணிதம் — 2ஏ 2பி (ஒருவர்), 4பி (ஒருவர்).

★ வர்த்தகம் — ஏ2 பி ஸி (ஒருவர்), ஏ பி 2ஸி (ஒருவர்).

★ கலை — 2ஏ 2பி (ஒருவா), 2பி 2ஸி (ஒருவர்).

*ஞானாசிரியர்*

★ கலை — ஏ 3பி (ஒருவர்), 2பி 2ஸி (மூவர்).

★ வர்த்தகம் — ஏ பி ஸி எஸ் (ஒருவர்).

(பரீட்சைக்கு தோற்றிய 12 பேரில் 9 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதிபெற்றனர்)

*சிதம்பரா*

★ உயிரியல் — 2ஏ 2பி (ஒருவர்).

★ கணிதம் — 2ஏ பி ஸி (ஒருவர்).

*வல்வை மகளிர்*

★ உயிரியல் — 2ஏ பி ஸி (ஒருவர்).

*உரும்பிராய் இந்து*

★ கணிதம் — 2ஏ 2பி(ஒருவர்).

★ உயிரியல் — பி2 எஸ் (ஒருவர்).

★ வர்த்தகம் — 2ஏ 2ஸி (ஒருவர்)

★ கலை — ஏ 3ஸி (ஒருவர்).

*சோமஸ்கந்தா*

★ கணிதம் — 2ஸி 2எஸ் (ஒருவர்).

★ வர்த்தகம் — ஏ பி 2ஸி (ஒருவர்), 3பி ஸி (ஒருவர்).

★ கலை — 3ஏ ஸி (ஒருவர்), ஏ 3பி (ஒருவர்).

*கோண்டாவில் இராமகிருஷ்ணா*

★ கலை — 4ஸி (ஒருவர்) 2ஸி 2எஸ் (ஒருவர்).

*இடைக்காடு ம. வி*

★ கணிதம் — 2ஏ2பி (ஒருவர்), 2ஏ பி ஸி (ஒருவர்).

★ வர்த்தகம் — 2பி 2ஸி (ஒருவர்).

★ கலை — 2ஏ 2ஸி (ஒருவர்), ஏ 2பி ஸி (ஒருவர்).

(பரீட்சைக்கு தோற்றிய 65 பேரில் 41 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்றனர்)

*மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தா*

★ வர்த்தகம் — 3ஏ பி (ஒருவர்) ஏ பி 2ஸி (ஒருவர்).

★ கலை — ஏ 2பி ஸி (ஒருவர்), ஏ பி 2ஸி (ஒருவர்).

*மீசாலை விக்கினேஸ்வரா*

ஏ பி 2ஸி (ஒருவர்).

*சாவகச்சேரி மகளிர்*

★ உயிரியல் — 4பி (ஒருவர்).

★ கணிதம் — 2பி ஸி எஸ் (ஒருவர்).

★ கலை — 2ஏ 2ஸி (ஒருவர்), ஏ பி 2ஸி (இருவர்).

வர்த்தகம் — ஏ 3ஸி (ஒருவர்), 3பி ஸி (ஒருவர்).

*சாவகச்சேரி டிறிபேக்*

★ கணிதம் — 3ஏ எஸ் (ஒருவர்)

★ உயிரியல் — 2பி 2ஸி (ஒருவர்).

★ வர்த்தகம் — பி 3ஸி (இருவர்)

★ கலை — 2ஏ ஸி எஸ் (ஒருவர்).

*சாவகச்சேரி இந்து*

★ கணிதம் — 2ஏ 2பி(இருவர்), 2ஏ பி ஸி (இருவர்).

★ உயிரியல் — 2ஏ 2பி (ஒருவர்), ஏ 3பி (இருவர்).

★ கலை — 3ஏ பி (இருவர்), 2ஏ 2பி (ஒருவர்).

★ வர்த்தகம் — 2ஏ 2பி (ஒருவர்), 3ஏ ஸி (ஒருவர்).

*பளை ம. வி.*

ஏ 2பி ஸி (ஒருவர்), ஏ பி 2ஸி (ஒருவர்).

*புனித சாள்ஸ்*

★ கலை — 2ஏ பி ஸி (ஒருவர்), 2ஏ பி எஸ் (ஒருவர்), தோற்றிய 27 பேரில் 14 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றனர்.

(இ-3-31-118)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய்வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 10 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

★ எஸ். குமாரசிவம் (இளைப்பாறிய இ. போ. ச ஊழியர்) அல்லது அருளம்பலம் ஞானாம்பிகை — சாவகச்சேரி.

★ பொன்னு சின்னத்துரை — மே/பா திருமதி சாங்கா, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

★ பாக்கியம் செல்லத்துரை — மீசாலை வடக்கு, மீசாலை

★ கிருபாராணி திருநாவுக்கரசு — கைதடி தெற்கு, நாவற்குழி.

★ செல்லையா தர்மலிங்கம் — பெரியவளவு கொடிகாமம் அல்லது கே. கே. எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ செல்லையா இராமலிங்கம் — பெரியவளவு, கொடிகாமம் அல்லது குமரகோட்டம் கோண்டாவில்

★ மூத்ததம்பி இரத்தினசிங்கம் — மட்டுவில் வடக்கு, தோப்பு ஒழுங்கை, சாவகச்சேரி

★ வி. எஸ். ராசையா — மே/பா திருமதி சின்னத்துரை, முகமாலை, எழுதுமட்டுவாள்.

★ கந்தசாமி இன்பரத்தினம் — ''யோகவாசா'' நிலாந்தியா, பருத்தித்துறை

★ செல்லப்பா அப்புத்துரை அல்லது பேரின்பநாதன் கமலாம்பிகை — வெள்ளம் பொக்கடி, கொடிகாமம்.

★ செல்லத்துரை மரியாம் (பிளசம்) — எழுதுமட்டுவாள், கிளாலி அல்லது 25, முதலாம் குறுக்குத் தெரு, பாசையூர்.

★ வீரசிங்கம் பாலசுப்பிரமணியம் — ஆனந்தா மகாவித்தியாலயம், 10 ஆம் படித்த மகளிர் குடியேற்றம், மிருசுவில், கொடிகாமம்.

★ சண்முகம் மகாலிங்கம் — வியாபாரி மூலை, பருத்தித்துறை.

★ திருமதி சி. கோமளாம்பிகை சிவபாதசுந்தரம்பிள்ளை (அமரர்) — காங்கேசன்துறை வீதி, இணுவில் சிவன்கோவிலடி, இணுவில்.

★ இளையதம்பி தம்பிஐயா — முதலியார் ஒழுங்கை, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

★ ராசம்மா அருளானந்தம் — கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ சரஸ்வதி சிவசூரிய மூர்த்தி — இணுவில் தெற்கு, இணுவில்.

★ கந்தையா சண்முகநாதன் — நவாலி வடக்கு, மானிப்பாய்.

★ குமாரசாமி சிவசுந்தரம் — பொன்னாலை, சுழிபுரம்.

★ மிக்கேல்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரி — 32, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ பொ. பழனி — 29, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

★ திருமதி ஜெயமணி கணேசன் — மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

★ சபாபதி இராஜரட்ணம்—மே/பா முத்துவேலு, டீச்சர் ஒழுங்கை, பெரிய அரசடி, மானிப்பாய்.

★ கணபதிப்பிள்ளை முத்தையா — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

★ கந்தையா அன்னலிங்கம் — தாவடிச் சந்தி, கோண்டாவில்.

★ நடராசா ஞானசேகரம் — மே/பா நாகப்பு வேலுப்பிள்ளை 'மகா பாக்கிய பவனம்', மூளாய்வீதி, வட்டுக்கோட்டை.

★ நாகப்பு வேலுப்பிள்ளை — 'மகாபாக்கிய பவனம்', மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

★ கிறேசிம்மா சிலுவராசா (பேபி) — 20/4, சென்ஜேம்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ திருமதி கனகம்மா — கனகரத்தினம் — மலரகம், இராசா வீதி, கல்வியன்காடு.

★ திருமதி செல்வராணி கணேசமூர்த்தி — சிவன் கோவிலடி, சித்தன்கேணி.

★ சிவக்கொழுந்து சத்தியலிங்கம் — கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ வைரமுத்து நடராசா — புண்ணியர் மடம், செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

★ செபஸ்தியாம் யோசப்பின் (பத்தாயிரம் சம்மாட்டி) — 14/1, புதுமை மாதாகோவில் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ திருமதி இராஜேஸ்வரி இரட்ணசிங்கம் அல்லது விமலகுமாரி இரட்ணசிங்கம் — 'கோல்ட் கவுஸ்', டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்.

★ தம்பு பரராஜசிங்கம் — டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்.

★ ஆறுமுகம் சபாநாயகம் — கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ காசிப்பிள்ளை சின்னத்துரை — டச்சு வீதி, உடுவில்.

★ கந்தர் நல்லையா (சைக்கிள்கடை) — கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ திருமதி வைரவி மாதன் — புத்தூர் மேற்கு, புத்தூர்.

★ ஆறுப்பிள்ளை வினாயகமூர்த்தி — புத்தூர் கிழக்கு, புத்தூர்.

★ தாமோதரம்பிள்ளை இளையதம்பி — விமான நிலைய வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

★ சி. ஜெரீனா — மே/பா வி. சிவப்பிரகாசம், கோணாவாலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் — சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.

★ குணமணி கனகு — இல 93, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

★ சாந்தி அப்புத்துரை — வளாக ஒழுங்கை,

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தியாகராஜா சிறிதரன்
(P. T. சிறிதரன்)
(சமுக சேவை உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா)

90, சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வவுனியாக் சச்சேரி சமூகசேவை உத்தியோகத்தர் தியாகராஜா சிறிதரன் 5-1-96 வெள்ளிக்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

இவர் றஜிதாவின் அன்புக் கணவரும், யாழ்ப்பாணம் கே.கே. எஸ். வீதி,'ஆ. இராசையா அன் சன்ஸ்' மருந்துக் கடை உரிமையாளர் பொ. தியாகராஜா திருமதி இரட்ணபூபதி தியாகராஜா ஆகியோரின் அன்பு மகனும், சிறிவதனியின் பாசமிகு அண்ணனும், முத்திரைச்சந்தி, நல்லூரைச் சேர்ந்த ''தங்கம்ஸ்'' கடை உரிமையாளர் திரு. திருமதி இராசரத்தினத்தின் மருகனும், விஜிதா (மாணவி, பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா), இராஜசெழியன், றஜனி, இராஜசேரன் (யாழ். புனித பத்திரியார் கல்லூரி மாணவர்) ஆகியோரின் அன்பு மைத்துனமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா வைரவ புளியங்குளம் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:-
இ. இராசரத்தினம்
(மாமன்)
''தங்கம்ஸ்''
முத்திரைச்சத்தி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:-
செ. மனோகரன்,
''லங்கா வாசா''
507, கன்டி வீதி,
மீசாலை,
(ஐயாகடைச் சந்தி அருகில்)

(39838)

## சின்னத்தம்பி இராசையா

புங்குடுதீவு, இறுப்பிட்டி, 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும், யாழ்ப்பாணம் K. K. S வீதியில் வசித்தவருமான சின்னத்தம்பி இராசையா (முன்னாள் பாலத்துறை வர்த்தகர்), 08-01-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா, பார்வதி ஆகியோரின் சகோதரனும், அகிலாண்டேஸ்வரி (வவுனியா), விஜயலட்சுமி (தண்ணீரூற்று), ஜெகநாதன் (கனடா), செல்வநாதன் [ஜேர்மனி], சிவநாதன் [கொழும்பு], ரவீந்திரநாதன் (பிரான்ஸ்), வசந்தநாதன் [லண்டன்] ஆகியோரின் அன்பு தந்தையும், தனபாலசிங்கம் [நில அளவையாளர்], நவரத்தினம் [லண்டன்], சின்னம்மா [வவுனியா], கருணாவதி [ஜேர்மனி], சிவானந்தயோகினி [கிளிநொச்சி], ஈஸ்வரி (பிரான்ஸ்), மங்களகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனனும், பரமலிங்கத்தின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [9-1-96] காலை 10 மணிக்கு நடைபெற்று கியான்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. கனகம்மா
[மனைவி]

தற்போதைய விலாசம்:
மே/பா இ. அரியரட்ணம்,
தவச்சோலை, நரசிம்ம கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

[39837]

## கதிரவேலு; குலவீரசிங்கம்
(சொக்கன்)
(முன்னாள் இளைஞர் சேவை மன்ற அதிகாரி— கிளிநொச்சி)

இளவாலை வசந்தபுரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அரியாலை கனகரட்ணம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குலவீரசிங்கம் இலண்டனில் 04-01-96 இல் காலமானார்.

இவர் லதாவின் அன்புக் கணவரும், நிதர்சனாவின் பாசமிகு தந்தையும், வசந்தபுரம் திரு திருமதி கதிரவேலு அவர்களின் அன்பு மகனும், ஆறுமுகம், திருமதி க. மகேஸ்வரி, திருமதி க. சிவபாக்கியம், செல்வநாயகம், செல்வரத்தினம் (ஆசிரியர்), திருமதி சி. சறோஜாதேவி, சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அரியாலை கனசரத்தினம் வீதி திரு திருமதி கதிரவேல் தங்கமலர் ஆகியோரின் அன்பு மருமகனும், ரஞ்சன் (வட கிழக்கு மாகாண சபை), திருமதி நகேந்திரன் ரதி, திருமதி கீதா யோகலிங்கம், உதயகுமார் (நோர்வே), சாந்தகுமார் (நோர்வே), Dr. விஜயகுமார் (நீர்கொழும்பு), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

ஈமக் கிரியைகள் 12-01-1996 வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

க.செல்வரத்தினம்
(ஆசிரியர் - சகோதரன்)
வளர்மதி வீதி,
கேடில்ஸ் விளையாட்டரங்கு,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

கதிரவேல் பவளம்
(மாமனார்)
''ராஜ் மகால்''
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(39937)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 09-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

### விரும்பிய...

(1 ஆ பக்கத் தொடர்ச்சி)
வருகிறது.

பி.பி.ஸி. சிங்கள சேவையில் செய்தியாளர் அமல் ஜெயசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததும் —

அதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட 7 பேர் காயமடைந்ததும் —

சைக்கிளில் வந்த ஒருவரினால் இக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டதும் — நகரில் விடுதலைப்புலிகள் இலகுவில் வெடிப் பொருளுடன் ஊடுருவலாம் என்பதை காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இலகுவில் நகருக்குள் ஊடுருவி மேலும் பல தாக்குதல்களை நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-6)

### அனுருத்த ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளார்.

இதற்கிடையில் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் அடுத்த மாதம் முற்பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'லங்கா தீப' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-உ)

### ஸ்ரீலங்கா.,

(1 ஆம் பக்கத்தொடர்ச்கி)
சட்டத்துக்கும், அரசாங்கத்தின் வங்கியியற் பிரமாணங்களுக்கும் கூட முரணானது.

இங்கு ஏற்பட்டுள்ள கடுமையான பணத் தட்டுப்பாடு காரணமாக அன்றாட வாழ்வுக்கு வேண்டிய குறைந்த பட்ச உண்வுப் பொருள்களைத்தானும் வாங்க இயலாதவர்களாய் மக்கள் உள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் வட இலங்கையின் பொருண்மியத்தை நசுக்கும் நோக்கத்துடன் பல்வேறு தடைகளை விதித்து, தமிழ் மக்களை பட்டினி போட்டு வதைக்கவும் முற்பட்டுள்ளது.

அத்தகைய தடைகளில் ஒன்றாக காசோலைகளை வங்கிகள் பணமாக மாற்றித்தர மறுப்பதும், சேமிப்புக் கணக்குகளிலும் நிலையான கணக்குகளிலும் இருந்து காசை மீட்க மறுப்பதும் அமைகிறது.

இங்குள்ள வங்கிகள் தமது தலைமையகங்களுடன் பேசியும் பலன் கிடைக்கவில்லை. அரசின்கட்டுப்பாடே இதற்கு காரணம்.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுடன் பேசி இன்னல்படும் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும்,

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### யோகேஸ்வரன் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது வீட்டில் தனியாக வாழ்ந்து வருகிறார்.

தனது வீட்டின் ஓர் அறையை வாடகைக்கு வழங்குவதற்காக பத்திரிகையில் விளம்பரம் ஒன்றை அவர் போட்டிருந்தார் என்றும் —

அறையைப் பார்க்க வந்ததாகக் கூறிக் கொண்டு வந்தவர்களே இந்த கொள்ளையை நடத்தியிருக்கலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3]

### சந்திவெளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கும் இடையில் வீதிப்பாதுகாப்பு கடமையையும் படையினர் மீள ஆரம்பித்துள்ளனர். (இ-3)

### மட்டக்களப்பில...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளின் தாக்குதல் பிரிவுக்குத் தேவையான பெரும் தொகையான ஆயுதங்கள் முகத்துவாரம், வாகரைப் பகுதிகள் ஊடாக, மட்டக்களப்பு வாவியைக் கடந்து கடத்தி வரப்பட்டு, மட்டக்களப்பு நகருக்கு ஒன்றரை மைல் தொலைவில் உள்ள பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கப்பட்டிருப்பதாகவும் —

இப்பிரதேசத்தில் உள்ள புலிகளின் பதுங்குழிகளுக்குத் தேவையான மருந்து வகைகளை சர்வதேச நிறுவனம் ஒன்று கடந்த வாரம் விநியோகித்திருப்பதாக பொலீஸார் நம்புவதாகவும் —

அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உணவுப் பொருள்களை ஏற்றி வரும் வாகனங்கள் கடத்தப்படும் சம்பவங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெகுவாக அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அப்பத்திரிகை, இது புலிகள் தாக்குதலுக்குத் தயாராவதையே காட்டுகின்றது என பொலீஸார் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகி வருவது குறித்து ''த சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழின் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸும் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

### நிதித்துறை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ முத்துத்தம்பி சிவஞானசுந்தரம் அல்லது பேபி சரோஜா சிவஞானசுந்தரம் — கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ செல்வமலர் கனகசபை — இல 32, சந்தான மாதாகோவில் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

★ துரையப்பா திருநாவுக்கரசு — 18/6 கேசாவில் பிள்ளையார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி செல்லந்துரை அல்லது கண்ணையா இரத்தினம் — 92,கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் அல்லது 87A, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

★ மங்கையர்க்கரசி தெட்சனாமூர்த்தி — காளி கோவிலடி. சங்கானை

★ வைரவன் செபமாலை அல்லது தங்கம்மா — வல்லைவீதி, சங்கானை கிழக்கு, சங்கானை.

# மரண அறிவித்தல்

## செல்லப்பா சண்முகலிங்கம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய ஆசிரியர் செல்லப்பா - சண்முகலிங்கம் அவர்கள் 6-1-1996 இல் சாவகச்சேரியில் காலமானார்

அன்னார் காலம்சென்ற செல்லப்பா - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், சாந்தினி [ஆசிரியை கனகரெத்தினம் ம. ம. வித்தி ] அவர்களின் அன்புக் கணவரும். சுமுகனின் (யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி) பாசமிகு தந்தையும், அரியாலை இராமலிங்கம் -சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி இ. சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா), செ.இராசலிங்கம் [ஓய்வுபெற்ற அதிபர்),செ. தர்மலிங்கம் [ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு] ஆகியோரின் சகோதரரும்), இ. மனோகரன் (கனடா), இ. ஸ்ரீகரன் பாபு[லண்டன்[,திருமதி யோகரெத்தினம்-சௌதாமினி (லண்டன்), இ. சுதாகரன் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), திருமதி ரவி தாரணி (கனடா), ச. சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி யோ. இராசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை). திருமதி க. தர்மலிங்கம் (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும், திருமதி ம. சரோ (இந்தியா) திருமதி இ. சித்திரகலா (லண்டன்),திருமதி சு. சசிகலா (ஆசிரியை), திரு. சு. யோகரெத்தினம் (லண்டன்), திரு. ரவி கனடா ஆகியோரின் உடன் பிறவா சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 7-1-1996 இல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றன. என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

தகவல்:
ச. சாந்தினி (மனைவி)
இ. சுதாகரன் (மைத்துனர்)
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

முகவரி:
க. கனகசுந்தரம்,
மிதிலை, ஐந்தாவது ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(39834)

## திருமதி நேசதுரை ஜெகசோதி

சுதுமலை தெற்கைச் சேர்ந்த திருமதி நேசதுரை ஜெகசோதி நேற்று (08.01.1996) காலமானார்.

அன்னார் நேசதுரையின் அன்பு மனைவியும், சுமாதரனின் (காந்தன்) அன்புத் தயாரும், வளர்மதியின் அன்பு மாமியும், வேற்பிள்ளை, தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (09.01.96) நண்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
பே. வேற்பிள்ளை

தற்காலிக முகவரி:-
நா. வரப்பிரகாசம் (பெரிய தம்பி)
மாவடிப் பிள்ளையார் கோவிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org